**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) – 2012–13 – ஆம் ஆண்டு சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்கள் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் செயல்படுத்துவது தொடர்பாக – அரசாணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி) துறை**

அரசாணை (நிலை) எண். 72 நாள்: 13.07.2012

ஆனி 29 திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.97, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 28.10.2011.
2. அரசாணை (நிலை) எண்.114, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 15.11.2011
3. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண் ஜி1/2296/2012, நாள் 15.6.2012.

-----

**ஆணை:–**

மேலே ஒன்றில் காணும் அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை சிறப்பு மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் தாட்கோ செயல்திட்டம் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் காணும் அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மாநில செயல்திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டது.

3. ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவது தொடர்பான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்படி ஒவ்வொரு உட்பிரிவிற்கும் பல்வேறு காலக் கட்டங்களில் தனித்தனியாக வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் 90 சதவீகித தொகை ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது என்றும், மேலாண்மை இயக்குநர், தாட்கோ தனது கருத்துருவில் தெரிவித்துள்ளார்.

4. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்காக, 2012–13–ஆம் ஆண்டிற்கான, மாநில செயல்திட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் 23.05.2012 அன்று நடைபெற்ற தாட்கோ இயக்குநர் குழு கூட்டத்தில்

விவாதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்துரு ரூ.302.89 கோடியில் (ரூ.111.25 கோடி மானியம் + ரூ.191.64 கோடி பருவக் கடன்) 71,467 நபர்கள் பயனடையும் வகையில் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

| Sl. No | Scheme | | Target | | Subsidy per bene-ficiary | Term loan per bene-ficiary | Total Subsidy | Total Term loan/P.C. | Total (6+7) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Indivi duals | Groups | (Rs.in lakhs) | | | | |
| 1 | 2 | | 3 | | 4 | 5 | 6 | 7 | 8 |
| **I.** | **Financial Assistance to Individuals** | | | | | | | | |
| a. | Land Purchase & Land Development Scheme | | 200 | | 2.25 | 5.25 | 450.00 | 1050.00 | 1500.00 |
| b. | Entrepreneur Development Programme | | 1516 | | 2.25 | 5.25 | 3412.00 | 7959.00 | 11371.00 |
| b.i | Setting up Petrol/Diesel / Gas retail out let | | 20 | | 2.25 | 5.25 | 45.00 | 105.00 | 150.00 |
| c. | Self Employment Programme for Youth (SEPY) | | 667 | | 2.25 | 5.25 | 1500.00 | 3501.75 | 5001.75 |
| c.i | Setting up clinic by young doctors | | 150 | | 2.25 | 5.25 | 337.50 | 787.50 | 125.00 |
| **Sub Total** | | | **2553** | | | | **5744.50** | **13403.25** | **19147.75** |
| **II.** | **Financial Assistants to SHG** | | | | | | | | |
| | a) | Revolving Fund to SHG (4000 SHG) | 48264 | 4022 | 0.25 | 0.50 | 1005.50 | 2011.00 | 016.50 |
| | b) | Economic Assistance to SHG | 18000 | 1500 | 2.50 | 2.50 | 3750.00 | 3750.00 | 7500.00 |
| | | **Sub Total** | **66264** | **5522** | | | **4755.50** | **5761.00** | **10516.50** |
| **III.** | **Financial Grant to individuals** | | | | | | | | |
| | a) | Fast Track Power Supply scheme | 1500 | | 0.10 | | 150.00 | - | 150.00 |
| | b) | Grant to Civil Services Examination Passed candidates | 150 | | 0.50 | | 75.00 | - | 75.00 |
| | c) | Grant to Law Graduates to set up their profession | 500 | | 0.50 | | 250.00 | - | 250.00 |
| | d) | Collector /M.D. Discretionary Fund | 500 | | 0.20 | | 100.00 | | 100.00 |
| | e) | M.D. iscretionary Fund Training | | | | | 50.00 | | 50.00 |
| | | **Sub Total** | **2650** | | | | **625.00** | | **625.00** |
| **Grand Total** | | | **71467** | **5522** | | | **11125.00** | **19164.25** | **30289.25** |

5. 2012–2013 – ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவி ரூ.111.24 கோடி நிதியுதவியுடன் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.302.89 கோடியில் தாட்கோவின் மூலம் செயல்படுத்த கீழ்கண்ட நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும் என மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(i) பயனாளிகளை தேர்வு செய்யும் போதும், திட்டங்களை செயல்படுத்தும் போதும் திட்டத்தின் பயன் அதிக பட்ச பயனாளிகளை சென்றடையும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(ii) வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது, தாட்கோவும் திட்டத்திற்கான மானியத்தை வழங்க வேண்டும், மேற்காணும் பயன்களும் நிதியுதவியும் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமானதாகும்.

(iii) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயனடைதல் கூடாது.

மேலாண்மை இயக்குநர், தாட்கோ தனது கருத்துரையில், ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதாரா திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவது தொடர்பாக கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்ற அரசாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**<u>மத்திய சிறப்பு நிதியுதவி திட்டம் 2012–13 – ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்:</u>**

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் 90 சதவீதம் தொகை ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

அரசாணை எண்.97 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (சிஉதி–1) நாள் 28.10.2011–ல் ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்ற திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவது தொடர்பாக விதிமுறைகள் வகுக்கப்பட்டன. 1980 முதல் சமூக பொருளாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும், இத்திட்ட செயல்பாட்டினை மேன்மைப்படுத்துவதற்காக செயல்பாட்டினை பற்றி மதிப்பீடு மற்றும் பகுத்தாய்வு செய்வதற்காக நபார்டு வங்கியின் ஒரு அங்கமான நாப்கான்ஸ் என்ற அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டு அந்நிறுவனம் கீழ்கண்டவாறு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

(அ) தற்பொழுது வழங்கப்பட்டு வரும் திட்ட அலகின் நிதி அளவு குறைவானதாக உள்ளதால் ஒவ்வொரு அலகிற்கும் தேவையான அளவு நிதி வழங்கி சொத்து உருவாக்கத்தை உறுதி செய்ய வேண்டும்.

(ஆ) பயனாளிகளுக்கு திட்ட மானியம் மற்றும் நிதியுதவி வழங்கும்போது பயனாளிகளை தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி சரியான பயனாளிகளை தேர்வு செய்தல்.

(இ) கடன் வழங்கும் கொள்கைகளில் தேவையான மாற்றங்களை செய்து திருத்தி அமைப்பதன் மூலம் உரிய காலத்தில் சரியான திட்டங்களுக்கு கடன் வழங்க வழிவகை செய்தல்.

நாப்கான்ஸ் வழங்கியுள்ள இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் 2012–2013–ஆம் ஆண்டிற்கான மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்களை செயல்படுத்தி ஆதிதிராவிடர் சமூக பொருளாதார மேம்பாட்டினை எய்துவதற்கும் திட்டங்களின் அடிப்படை நோக்கத்தை உறுதி செய்யும் வகையிலும், கீழ்க்கண்டவாறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றலாம்.

<u>திட்டத்தைத் தேர்வு செய்தல்</u>

ஒவ்வொரு ஆண்டும் திட்டம் செயல்படுத்தும் பொழுது திட்டத்திற்கான உச்சவரம்பு மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் சில முன்னுரிமை இல்லாத, வருவாயை உறுதி செய்ய இயலாத சமூக மாற்றத்தை ஏற்படுத்தாத மற்றும் குறைந்த அலகுத்தொகை கொண்ட கடன் திட்டங்களும் தேர்வு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டது. இதனால் பயனாளிகளின் வருமானத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. மேலும் எதிர்பார்த்த அளவில் சமூக பொருளாதார மாற்றங்களும் ஏற்படவில்லை. எனவே சரியான வருவாயை உறுதி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை தேர்வு செய்யவும், அவற்றிற்கான குறைந்தபட்ச மதிப்பீட்டினை நிர்ணயம் செய்யவும் கீழ்கண்டவாறு வழிமுறைகளை வகுக்கலாம்.

ஒவ்வொரு பயனாளியும் தேர்வு செய்யப்படும் போது திட்ட அறிக்கையினை பகுப்பாய்வு செய்து நல்ல திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து அதனடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

1. தேர்வு செய்யப்படும் திட்டம் சொத்தினை உருவாக்கக் கூடியதாகவும் தொடர்ந்து பயனாளிகளுக்கு போதிய வருமானத்தினை வழங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

2. தேர்வு செய்யப்படும் திட்டம் குறைந்தபட்சமாக ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் முழுமையான திட்ட அறிக்கையுடன் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. ஆடு, மாடு வளர்த்தல், பெட்டிக்கடை (ம) மளிகை கடை வைத்தல், துணி வியாபாரம் செய்தல், வாடகை பாத்திரக்கடை வைத்தல், சைக்கிள் கடை, காய்கறி பழங்கள் விற்பனை செய்தல், வாடகை சேர் கடை நடத்துதல், மைக்செட், கரிமூட்டம் அமைத்தல், மற்றும் தென்னை(ம) பனை ஓலை முடைதல் போன்ற தொடர் வருவாய் ஈட்டுதலை உறுதி செய்ய இயலாத எதிர்பார்ப்பிற்கேற்றார் போல் சமூக மாற்றங்களை ஏற்படுத்தாத திட்டங்களை தேர்வு செய்வதை அறவே தவிர்த்தல் வேண்டும்.

4. வங்கியாளர்களால் திட்ட அறிக்கையில் உள்ள படி முழுக் கடனையும் வழங்காமல் மானியத்தொகையினை மட்டுமே கடனாக வழங்குதல் மற்றும் சொத்து உருவாக்கத்தின்போது வங்கியிலிருந்து நேரடியாக பயனாளிகள் பெயரில் காசோலை வழங்குதல் போன்ற திட்டங்கள் தவிர்க்க வேண்டும்.

5. மேலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பொருட்டு இலவசமாக ஆடுகள் மற்றும் பால்மாடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக செயல்படுத்தி வருவதால் ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை அவர்களுக்கு அந்தந்த தாட்கோ மாவட்ட மேலாளர்களே பரிந்துரை செய்ய வேண்டும்.

**நிலுவையிலிருக்கும் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் முறை**

2011–12ம் ஆண்டு பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் வங்கிக்கு அனுப்பப்பட்டு 31.03.2012 வரை வங்கிகளிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் மீதான படிவம்– III-க்கான மானியத் தொகை தகுதியான சொத்தினை உருவாக்கி வருவாயை உறுதி செய்யும் இனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மானியம் விடுவிக்கப்படாத விண்ணப்பங்களை மாவட்ட அளவிலான தேர்வுக்குழு 2012–2013–ஆம் ஆண்டுக்கான வழிகாட்டுதலின்படி பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**மாவட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு**

மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தாட்கோ பொருளாதார திட்டங்களுக்கான மாவட்ட வாரியான ஒதுக்கீடு அந்தந்த மாவட்டங்களின் ஆதிதிராவிட மக்கள் தொகை விகிதாசாரத்தின்படி மேற்கொள்ளப்படும். மேலும் பொருளாதார திட்டத்திற்கான தொழில்களை (Trade) மேலாண்மை இயக்குநர் தேர்வு செய்ய வேண்டும். திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் மாவட்ட வாரியான உள்ஒதுக்கீட்டில் இலக்கினை அடையவில்லையெனில் மாவட்ட ஒதுக்கீட்டிற்கு மிகாமல் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேறு தொழில்களுக்கு மேலாண்மை இயக்குநரே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

## I நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

**நோக்கம் :–**

இத்திட்டம் ஆதிதிராவிட மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தவும் ஆதிதிராவிட மகளிர் பெயரில் சொந்த நிலம் வாங்கவும், ஆதிதிராவிட மக்களின் நில உடமையை அதிகரிக்கும் பொருட்டும், அந்நிலத்தை மேம்படுத்த பல்வேறு உதவிகள் அளித்து வேளாண்மை உற்பத்தித் திறன் அதிகரிப்பதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100% விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

**தகுதி :–**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்
2. வயது 18–க்கு மேலும் 55– வயதிற்குள்ளாகவும் இருக்கவேண்டும்.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**நிபந்தனைகள்:–**

**நிலம் வாங்குதல்**

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்கும் போது கீழ்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

2. நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர் அல்லாத இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

3. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

4. நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட நிலத்தினை விண்ணப்பதாரர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது.

5. விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் கடந்த 5 ஆண்டுகளில் சொந்தமாக நிலம் வைத்திருந்து அதனை எவருக்கும் மாற்றியோ, விற்பனையோ செய்திருக்கக் கூடாது.

**வாங்கும் நிலத்தின் அளவு:–**

இத்திட்டத்தின் கீழ் வாங்கிய நிலம் மற்றும் தன்னுடமை உட்பட அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலமும் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலமும் வைத்துக்கொள்ளலாம்.

**நிலம் மேம்பாடு செய்தல்**

இத்திட்டத்தின் கீழ் நிலம் மேம்பாடு செய்யும் போது கீழ்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழி காட்டுதலின் படி கிணறு தோண்டுதல், ஆழ் துளை கிணறு தோண்டுதல் மற்றும் மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

3. ஆழ்துளைக் கிணறு தோண்டுவதற்கு விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின்(Geologist) சான்று பெறப்படவேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்:—**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் (2 நகல்களில்) விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்கண்ட ஆவணங்கள் இணைத்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. சாதிச் சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிடச் சான்று
4. வாங்கவுள்ள நிலத்தின் புல எண், சிட்டா, அடங்கல் மற்றும் நில ஆவணம்
5. நிலத்தை விற்பவர் மற்றும் வாங்குபவர்களுக்கு இடையிலான ஒப்பந்த பத்திரம்
6. வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் வழிகாட்டி மதிப்பு
7. 25 ஆண்டுகளுக்கு வில்லங்க சான்றிதழ்
8. அரசு வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை
9. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

**விண்ணப்பம் பெறும் முறை:—**

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர்கள் அலுவலகத்தில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மானிய விவரம்:—**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். நிலத்தின் மதிப்பு அரசின் வழிகாட்டி மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:—**

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் வேளாண் இணை இயக்குநர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும். வேளாண் இணை இயக்குநரிடமிருந்து விண்ணப்பதாரார் வாங்க உத்தேசித்துள்ள நிலத்தின் தன்மை, உற்பத்தி திறன் பற்றிய ஆய்வறிக்கை மற்றும் சார்பதிவாளரிடமிருந்து நிலத்தின் மதிப்பிற்கான வழிகாட்டி மதிப்பு பெறப்பட்டவுடன் விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர் அவர்களால் சரிபார்க்கப்படும். சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களில் ஆவணங்கள் சரியாக இருப்பின் அவ்விண்ணப்பதாரர்களை மாவட்ட அளவிலான கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு நேர்காணல் மூலம் தெரிவு செய்யும்.

| | | |
|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2) | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் |
| 3) | வேளாண் இணை இயக்குநர் | உறுப்பினர் |
| 4) | மாவட்ட மேலாளர் தாட்கோ | உறுப்பினர் / செயலர் |
| 5) | மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | உறுப்பினர் |

**<u>நிதிவிடுவிக்கும் முறை:—</u>**

1. தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரை செய்து வங்கி கடன் கோரி வங்கிக்கு அனுப்பப்படும். வங்கியிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வங்கி கடன் அளிப்பது தொடர்பான ஒப்புதல் (Form III) பெறப்பட்டவுடன் தாட்கோ மானியத் தொகை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணைப்படி நேரடியாக வங்கிக்கு விடுவிக்கப்படும்.

2. வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்காக நிலம் விற்பவருக்கு நேரடியாக கடன் தொகை விடுவிப்பார்.

**<u>சொத்து உருவானதை உறுதி செய்தல்:—</u>**

தாட்கோ மாவட்ட மேலாளர், மானிய தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள், விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதை சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும்.

## <u>II தொழில் முனைவோர் திட்டம்</u>
## <u>(Entrepreneur Development Programme)</u>

**<u>நோக்கம் :—</u>**

ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த, விருப்பமான, முன்அனுபவம் உள்ள தொழில் புரிந்து வருவாய் ஈட்டி பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டு தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுத்தக்கூடிய திட்டமாகும்.

**<u>தகுதி:—</u>**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்களின் கூட்டாண்மை நிறுவனமாகவும் இருக்கலாம்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது 18—க்கு மேலும் 55— வயதிற்குள்ளாகவும் இருக்கவேண்டும்.
4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும்.
5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**<u>நிபந்தனைகள்:—</u>**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
2. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
3. விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர்கள் அலுவலகத்தில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:—**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் (2 நகல்களில்) விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைத்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. சாதி சான்று
2. ஆண்டு வருமான சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
4. விலைப்புள்ளி டின் எண்ணுடன் (Quotation with TIN No.)
5. ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் (வாகன கடனுக்கு மட்டும்)
6. முன் அனுபவச் சான்றிதழ்
7. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:—**

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களை கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு ஒவ்வொரு வட்டாரத்திலும் கூடி விண்ணப்பதாரர்களைத் நேர்காணலுக்கு அழைத்து திட்டத்தைப் பற்றிய விவரங்கள் மற்றும் திட்டத்தின் மீதான விண்ணப்பதாரரின் அறிவுத் திறமை ஆகியவற்றை ஆராய்ந்து இத்திட்டத்தை தெரிவு செய்யும்.

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட மேலாளர் | – | தலைவர் |
| 2. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் | – | உறுப்பினர் |
| 3. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | – | உறுப்பினர் |
| 4 .துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிந) | | உறுப்பினர் |
| 5. சேவை பகுதி வங்கியாளர்கள் | | உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

**மானிய விவரம்:—**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**<u>நிதி விடுவிக்கும் முறை:–</u>**

வங்கிகடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் (Form III) பெறப்பட்டவுடன் தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக நேரடியாக விடுவிப்பார்.

**<u>சொத்து உருவாக்குதல்:–</u>**

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

## <u>III தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம்</u>

தாட்கோவின் மூலம் தொடர்ந்து ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு பல்வேறு சமூக பொருளாதார முன்னேற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட போதிலும் சமூக பொருளாதார மாற்றங்களை கருத்தில் கொண்டு அவ்வப்போது காலநிலைகளுக்கேற்ப திட்டங்களில் மாற்றம் செய்வதோடு சிறப்பு திட்டங்களும் அறிமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. உலகமயமாக்கல் தொழில்சார் பொருளாதாரம் போன்ற சூழ்நிலையில் வளர்ந்து வரும் அனைத்து பிரிவுகளிலும் ஆதிதிராவிடர்களின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு நிலம் வாங்குவதற்காகவும் (சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு முகவர் தேர்வில் 100க்கு 35 மதிப்பெண்கள் வழங்கப்படுவதால்), வங்கி உத்திரவாதம் வாங்குவதற்கான குறைந்தபட்ச முன்வைப்புத் தொகை வங்கி கணக்கில் வைக்கவும் (தேர்வில் 25 மதிப்பெண்கள் வழங்கப்படுவதால்) மற்றும் விற்பனை நிலையம் அமைப்பதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கவும் மானியம் வழங்கப்படும். இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக் கூடிய திட்டமாகும்.

**<u>நோக்கம்</u>**

இத்திட்டம் வளர்ந்து வரும் தொழில் சார் பொருளாதாரத்தில் ஆதிதிராவிட மக்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இதுவரை மற்ற இனத்தவரிடம் வேலைவாய்ப்பை கோரிய நிலையை மாற்றி வேலைவாய்ப்பை வழங்க கூடிய நிலையை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**<u>தகுதிகள்</u>**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்
2. விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தொழில் சார்ந்த (Professional) கல்வி பயின்றவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. விண்ணப்பதாரா் 18 வயதுக்கு மேலும் 55 வயதுக்குள்ளாக இருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரா் மற்றும் அவரது குடும்பத்தினா் தாட்கோ திட்டத்தில் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
6. விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
7. விண்ணப்பதாரா் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவா்களின் நியமனத்திற்கு எண்ணெய் நிறுவனங்கள் நிா்ணயிக்கும் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.
8. விண்ணப்பதாரா் பெயரில் வணிக பயன்பாட்டிற்கான நிலங்கள் ஏதும் அம்மாவட்டத்தில் இருக்கக் கூடாது.

**பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு மற்றும் அதற்கான நிலம் வாங்குவதற்கான நிபந்தனைகள்**

1. பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவா்களின் நியமனத்திற்கு விண்ணப்பத்திருக்க வேண்டும்.

2. பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையத்திற்காக வாங்க உத்தேசித்துள்ள நிலத்தினை விண்ணப்பதாரே தெரிவு செய்ய வேண்டும்.

3. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும்.
4. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரா் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது.

5. இத்திட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசித்துள்ள அடிப்படை கட்டமைப்புகள் எண்ணெய் நிறுவனத்தின் விதி/தேவைக்குட்பட்டு விண்ணப்பதாரரே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

6. கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் எண்ணெய் நிறுவனத்தின் நேர்முகத் தேர்விற்கான மற்றும் தெரிவு செய்வதற்கான அழைப்பாணை கடிதம் பெற்றிருக்க வேண்டும்.

7. இதற்கு முன் அனுபவம் தேவையில்லை.

**வாங்கும் நிலத்தின் அளவு:–**

எண்ணெய் நிறுவனங்களால் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு எண்ணெய் நிறுவனங்களால் நிா்ணயிக்கப்பட்ட அளவில் நிலம் வாங்கலாம்.

**கட்டமைப்பு வசதிகள் மற்றும் வைப்புத் தொகை நிதி**

இத்திட்டத்தில் பூமிக்கடியில் எண்ணெய் சேமிப்பு கிடங்கு, பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய அலுவலக அறை மற்றும் பெட்ரோல் வழங்கும் குழாய் போன்ற கட்டமைப்புகள் அமைக்கலாம். வங்கி உத்தரவாதம் பெறுவதற்கான குறைந்தபட்ச முன்வைப்புத் தொகையினை

தொடர்புடைய நிறுவனத்திற்கு மானியமாக வழங்கலாம். விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்படாத பட்சத்தில் இவ்வைப்புத்தொகையினை தாட்கோவிற்கு திரும்ப செலுத்த வேண்டும்.

**<u>விண்ணப்பம் பெறும் முறை:–</u>**

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர் அலுவலகங்களில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்:–</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் (2 நகல்களில்) விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்கண்ட ஆவணங்கள் இணைத்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. சாதிச் சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிடச் சான்று
4. வாங்கவுள்ள நிலத்தின் புல எண்., சிட்டா, அடங்கல் மற்றும் நில ஆவணம்
5. நிலத்தை விற்பவர் மற்றும் வாங்குபவர்களுக்கு இடையிலான ஒப்பந்த பத்திரம்
6. வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் வழிகாட்டி மதிப்பு
7. 25 ஆண்டுகளுக்கு வில்லங்க சான்றிதழ்
8. வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை
9. பெட்ரோல் / டீசல் சில்லறை விற்பனை நிலைய டீலர்களின் நியமனத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பத்தின் நகல்.
10. கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு எண்ணெய் நிறுவனத்தின் நேர்முகத் தேர்விற்கான மற்றும் தெரிவு செய்வதற்கான அழைப்பாணை கடிதம்.
11. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

**<u>மானிய விவரம்:–</u>**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். நிலத்தின் மதிப்பு அரசின் வழிகாட்டி மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:–</u>**

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சார்பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். சார்பதிவாளரிடமிருந்து நிலத்தின் மதிப்பிற்கான வழிகாட்டி மதிப்பு பெறப்பட்டவுடன் விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர் அவர்களால் சரிபார்க்கப்படும். சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களில் ஆவணங்கள் சரியாக இருப்பின் அவ்விண்ணப்பதாரர்களை மாவட்ட அளவிலான கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு நேர்காணல் மூலம் தெரிவு செய்யும்.

| | | |
|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2) | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் |
| 3) | மாவட்ட மேலாளர் தாட்கோ | உறுப்பினர் / செயலர் |
| 4) | மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | உறுப்பினர் |
| 5) | பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |

**நிதிவிடுவிக்கும் முறை:—**

1. தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரை செய்து வங்கி கடன் கோரி வங்கிக்கு அனுப்பப்படும். வங்கியிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வங்கி கடன் அளிப்பது தொடர்பான ஒப்புதல் (Form III) பெறப்பட்டவுடன் தாட்கோ மானியத் தொகை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணைப்படி நேரடியாக வங்கிக்கு விடுவிக்கப்படும்.

2. வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்காக நிலம் விற்பவருக்கு நேரடியாக கடன் தொகை விடுவிப்பார்.

**சொத்து உருவானதை உறுதி செய்தல்:—**

தாட்கோ மாவட்ட மேலாளர், மானிய தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள், விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதை சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும்.

## IV இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

**நோக்கம்:—**

படித்த, வேலையற்ற அல்லது குறைவான சம்பளத்தில் வேலை செய்யும் ஆதி திராவிட இளைஞர்கள் தங்களுக்கு தெரிந்த விருப்பமான தொழிலில் மானியம் மற்றும் கடன் உதவி பெற்று வருவாய் ஈட்டி பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் பொருட்டு இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுத்தக்கூடிய திட்டமாகும். இத்திட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் தாட்கோ மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தகுதி :—**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்

2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3. வயது 18—க்கு மேலும் 35— வயதிற்குள்ளாகவும் இருக்க வேண்டும்.

4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

6. தாட்கோ, மாநில அல்லது மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்

7. விண்ணப்பதாரர் மருத்துவமனை அமைப்பதற்கு எம்.பி.பி.எஸ், பி.எஸ்., எம்.எஸ் மற்றும் பி.டி.எஸ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றிருக்கவேண்டும். மேலும் இந்தியன் மெடிக்கல் கவுன்சிலிங்லில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:–**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
2. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
3. விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.

**விண்ணப்பம் பெறும் முறை:–**

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர் அலுவலகங்களில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:–**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் (2 நகல்களில்) விண்ணப்பதாரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைத்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. சாதி சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
4. விலைப்புள்ளி டின் எண்ணுடன் (Quotation with TIN No.)

5. ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் (வாகன கடனுக்கு மட்டும்)
6. முன் அனுபவச் சான்றிதழ்
7. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

**<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–</u>**

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களை கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு ஒவ்வொரு வட்டாரத்திலும் கூடி விண்ணப்பதாரர்களை நேர்காணலுக்கு அழைத்து திட்டத்தைப் பற்றிய விபரங்கள் மற்றும் திட்டத்தின் மீதான விண்ணப்பதாரரின் அறிவுத்திறமை ஆகியவற்றை ஆராய்ந்து இத்திட்டத்தை தெரிவு செய்யும்.

1. மாவட்ட மேலாளர் – தலைவர்
2. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் – உறுப்பினர்
3. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் – உறுப்பினர்
4. துணைவட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிந) உறுப்பினர்
5. சேவைப்பகுதி வங்கியாளர்கள் உறுப்பினர்

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

**<u>மானிய விவரம்:–</u>**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**<u>நிதி விடுவிக்கும் முறை:–</u>**

வங்கிகடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் (Form III) பெறப்பட்டவுடன் தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக நேரடியாக விடுவிப்பார்.

**<u>சொத்து உருவாக்குதல்:–</u>**

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

## V மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுழல் நிதி / பொருளாதார கடனுதவி திட்டம்

**நோக்கம்:–**

ஆதிதிராவிடர் மகளிர் தங்களுக்குள்ள தனித் திறமைகளை வெளிக் கொணர்ந்து ஒரு குழுவாக இணைந்து தங்களுக்கு தெரிந்த தொழில் புரிந்து வருமானம் ஈட்டி சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் முன்னேறுவது திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவற்றிற்கான மானியம் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும். இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக்கூடிய திட்டமாகும்.

**தகுதி:–**

1. ஆதிதிராவிட மகளிர் உறுப்பினர்களாக உள்ள மகளிர் சுயஉதவி குழுவாக மட்டுமே இருக்க வேண்டும்.
2. குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. சுழல் நிதி பெறுவதற்கு குழு தரம் பிரிக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
4. பொருளாதாரக் கடன் பெறுவதற்கு சுழல்நிதி பெற்று இரண்டாவது முறையாக தரம்பிரித்தல் செய்யப்பட்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
5. சுய உதவிக் குழு வேறு எந்த அரசு திட்டத்திலும் சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுக்கான மானியம் பெற்றிருக்கக் கூடாது.

**சுழல் நிதிக்கான மானியம் :–**

குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு தரம் பிரித்தல் செய்யப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றிருப்பின் வங்கியில் சுழல் நிதி பெறுவதற்காக தாட்கோ மானியம் ரூ.25,000/– வங்கிக்கு விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**பொருளாதார கடனுதவிக்கான மானியம் :–**

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். பொருளாதாரக் கடன் பெறுவதற்கு தாட்கோ மானிய உதவியுடன் சுழல்நிதி பெற்ற குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:–**

மகளிர் சுய உதவிக்குழு சுழல்நிதி பெற்று இரண்டு முறை தரம்பிரித்தல் செய்து தேர்ச்சி பெற்ற குழுக்கள் கீழ்கண்ட ஆவணங்களை (2 நகல்களில்) விண்ணப்பத்துடன் இணைத்து தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

1. குழு தரம் பிரித்தல் சான்று
2. உறுப்பினர்களின் விவரங்கள் புகைப்படத்துடன் இணைக்கப் படவேண்டும்.
3. குழு உறுப்பினர்களின் குடும்ப அட்டை நகல்
4. குழு உறுப்பினர்களின் சாதி சான்றின் நகல்
5. குழு உறுப்பினர்களின் வருமான சான்றின் நகல்
6. குழுவின் தீர்மான நகல்
7. திட்ட அறிக்கை
8. வங்கிக் கணக்குப் புத்தக நகல்

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தாட்கோ மானியத்திற்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்

**<u>நிதி விடுவிக்கும் முறை :—</u>**

வங்கிகடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் (Form III) பெறப்பட்டவுடன் விண்ணப்பத்திலுள்ள குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் குழுவில் தொடர்ந்து உள்ளனரா என்பது சரிபார்க்கப்பட்டு தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக நேரடியாக விடுவிப்பார்.

**<u>சொத்து உருவாக்குதல்</u>**

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

## <u>VI மேலாண்மை இயக்குநர்/ மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டம்</u>

**<u>நோக்கம்:-</u>**

தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுயதொழில் புரிந்து பயன் பெறும் பொருட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறாத ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர், 40 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

**<u>தகுதி:—</u>**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3. வயது வரம்பு – ஊனமுற்றோர் மற்றும் பெற்றோர் இல்லா குழந்தைகள் பிறந்தது முதல், விதவைகள் எந்த வயதினராகவும் இருக்கலாம், திருமணமாகாத பெண்கள், முதியோர், கணவனால் கைவிடப்பட்டோர் 40 வயதிற்மேல் இருக்கவேண்டும்.

4. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

**<u>விண்ணப்பம் பெறும் முறை:–</u>**

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர்கள் அலுவலகத்தில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:–</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்க்கண்ட அனைத்து ஆவணங்களையும் இணைத்து மேலாண்மை இயக்குநருக்கு அல்லது மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1. சாதி சான்று
2. ஆண்டு வருமான சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
4. ஆதரவற்றவர் என்பதற்கான சான்று
5. பெற்றோர் இல்லை என்பதற்கான சான்று

**<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–</u>**

இத்திட்டத்திற்கான பயனாளிகள் மேலாண்மை இயக்குநர் / மாவட்ட ஆட்சியர் அவர்களால் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு மானியம் விடுவிடுக்கப்படும்.

**<u>மானிய விவரம்:–</u>**

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக ரூ.20,000/– மானியம் கோடிட்ட காசோலையாக வழங்கப்படும்.

**<u>சொத்து உருவாக்குதல்:–</u>**

மானியம் வழங்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

**<u>VII மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை பயிற்சி திட்டம்</u>**

ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த தொழில்முனைவோராக விரும்புபவர்களுக்கும் ICWA/CA போன்ற பயிற்சிகளை தேவையின் அடிப்படையில் பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் மேலாண்மை இயக்குநரால் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படும். இதற்கான பயிற்சி கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை மேலாண்மை இயக்குநர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.

## VIII துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்
## (Fast Track Power Supply)

**நோக்கம்:-**

தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்புகளை விரைந்து வழங்கும் திட்டத்தின் கீழ் (Fast Track Power Supply) விவசாயிகளிடம் ரூ.10,000/– வைப்புத் தொகை பெற்றுக் கொண்டு விரைவில் மின் இணைப்பு வழங்கி வருகிறது. ஆதிதிராவிட விவசாயிகளில் அதிகமான நபர்கள் ரூ.10,000/–ஐ செலுத்த இயலாத நிலையில் உள்ளதால் துரித மின் இணைப்பு பெறும் வகையில் நபர் ஒன்றுக்கு ரூ.10,000/– வைப்புத் தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் நேரடியாக தாட்கோ செலுத்தி துரித மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தகுதி:-**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்தவராக இருக்கவேண்டும்
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**விண்ணப்பம் பெறும் முறை:–**

துரித மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் செய்தி குறிப்பின் மூலம் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படும்.

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட மேலாளர் அலுவலகங்களில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:–**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டப்பட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைத்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. சாதிச் சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல்/வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிட சான்று
4. நிலப்பட்டா மற்றும் சிட்டா அடங்கல் நகல்
5. மின்சார வாரியத்தில் பதிவு செய்த இரசீது நகல்
6. காத்திருப்போர் பட்டியலுக்கான தகவல் சீட்டு

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–**

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் உள்ளனவா என மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு (Scrutiny of Application) விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீது மாவட்ட மேலாளர் மற்றும் /அல்லது உதவி மேலாளரால் தள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தள ஆய்வு முடிந்த பின்னர் இலவச மின் இணைப்பு பெற வேண்டி தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் மாவட்ட மேலாளர்களால் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்படும்.

இவ்வாறு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) நபருக்கு ரூ.10,000/– வீதம் சென்னையில் உள்ள மின்சார வாரிய தலைமையகத்திற்கு மொத்த தொகையினை மேலாண்மை இயக்குநர் விடுவிப்பார்.

விண்ணப்பதாரர்க்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட மேலாளர் சரிபார்த்து மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

## IX **இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி**

**நோக்கம்:-**

இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வுகளை எழுத விரும்பும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதனிலைத் (Preliminary Exam) தேர்வில் தேர்ச்சி பெற்று, முதன்மை தேர்வு (Main Exam) எழுதுபவர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**தகுதி:-**

1. ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–ற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:-**

1. இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.
2. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் மாநில, மத்திய அரசு, பொது துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பம் பெறும் முறை:–**

தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியுள்ள இளைஞர்களிடமிருந்து தமிழ்நாடு அரசு செய்தித் துறை மூலம் ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படும்.

விண்ணப்பம் இலவசமாக **மாவட்ட மேலாளர்கள் அலுவலகத்தில் வழங்கப்படும்.** அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:—</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்கண்ட இணைப்புகளுடன் தாட்கோ, தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

1. சாதிச் சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிட சான்று
4. இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றின் நகல் (Attested).
5. முதன்மைத் தேர்வு எழுதுவதற்கான விண்ணப்பத்தின் நகல்.
6. மாநில, மத்திய அரசு மற்றும் பொது துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக/நிரந்தர பணியில் இல்லை என்பதற்கான (Self Declaration) சான்று

**<u>திட்ட செயலாக்கம் :-</u>**

பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள இளைஞர்களுக்கு ரூ.50,000/— கோடிட்ட காசோலையாக வழங்கப்படும். இத்தொகையில் புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றிற்காக ரூ.50,000/— பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு பயன்படுத்தப்பட்ட தொகைக்கான அசல் ரசீதுகள் மற்றும் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று ஆகியவற்றை தொகை பெறப்பட்ட மூன்று மாதத்திற்குள் தாட்கோ, தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பெற்ற தொகையினை வங்கி வரைவாக தாட்கோ, அலுவலகத்திற்கு திரும்ப செலுத்த வேண்டும்.

## <u>X இளம் சட்டப்பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி</u>

**<u>நோக்கம்:—</u>**

இளம் சட்டப்பட்டதாரிகள் தங்கள் தொழிலை துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேசை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.50,000/— நிதியாக வழங்கப்படுகிறது.

**<u>தகுதி:-</u>**

1. ஆதிதிராவிடர் இனச்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
3. தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
4. வயது வரம்பு 25—லிருந்து 45—க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
5. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,00,000/—ற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**விண்ணப்பம் பெறும் முறை:—**

விண்ணப்பம் இலவசமாக மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலகத்தில் வழங்கப்படும். அல்லது தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.tn.gov.in) படியிறக்கம் செய்து கொள்ளலாம். பெறப்பட்ட விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை:-**

1. சாதிச் சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிடச் சான்று
4. சட்டம் பயின்றதற்கான சான்று
5. பார் கவுன்சில் உறுப்பினர் சான்று
6. வயது சான்று (Age proof)

விண்ணப்பங்கள் மாவட்ட ஆதிதிராவிடர் அலுவலர் மூலம் பெறப்பட்டு ஆணையர், ஆதிதிராவிடர் நலத் துறை அவர்களுக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பதாரர்களுக்கு உரிய தொகை ஒருவருக்கு ரூ.50,000/— என்ற அடிப்படையில் ஆணையர், ஆதிதிராவிடர் நலத் துறை அவர்களுக்கு தாட்கோ விடுவிக்கும்.

விண்ணப்பதாரருக்கு ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் தொகை விடுவிக்கப்படும். தொகை விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப் பட்டதற்கான பயனீட்டுச் சான்று ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு அனுப்புவார்.

6. 2012—2013—ஆம் ஆண்டில் 71,467 ஆதிதிராவிட நபர்கள் பயனடையும் வகையில் ரூ.302,88,25,000/—ல் (ரூபாய் முன்நூற்று இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) (ரூபாய் 111.24 கோடி மானியம் + ரூ.191.6525 கோடி பருவக் கடன் செயல்படுத்தப்படவுள்ள ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைக் கொண்ட மாநில செயல் திட்டம் மற்றும் அவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து 2012—2013—ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியில் 111.24 கோடி நிதியுதவியுடன் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளின் மேற்கூறப்பட்ட விதிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்து, தாட்கோ மூலம் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

7. மேலும், மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் பயனாளிகளை தேர்வு செய்யும் போதும் திட்டங்களை செயல்படுத்தும்போதும், திட்டத்தின் பயன் அதிகபட்ச பயனாளிகளை சென்றடையும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றும் வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது தாட்கோ திட்டத்திற்கான மானியத்தை வழங்க வேண்டும்.

8. இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது, தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளையும் பயனாளிகள் எண்ணிக்கையையும் மாற்றி அமைத்துக் கொள்ள மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. மேற்காணும் திட்டங்களின் பயன்களும் நிதியுதவியும் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமானதாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயனடைய தகுதியற்றவர் என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 39937/12,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11.07.2012 –இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு.ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– 101
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 5
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18
மாநில கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை–1) சென்னை–35
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –6
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–6
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை–6
இயக்குநர், சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை, புதுடெல்லி –1
<u>நகல்:–</u>
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை–6
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
அனைத்து தாட்கோ மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர்) தாட்கோ வழியாக)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (அனைத்து பிரிவுகள்), சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்